IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.160/2022

Deposition of Witness for P.W.17

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.சொக்கநாதன் |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | தடய அறிவியல் அலுவளர், வேலூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.01.2026.

1, 6, 7 எதிரிகள் ஆஜர். 2, 3, 4, 5 எதிரிகள் ஆஜரில்லை மனு ஏற்பு. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

முதல் விசாரணை-

நான் தற்போது வேலூர் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிகிறேன். கடந்த 11.06.2020 அன்று நான் அறிவியல் அலுவலராக வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் பணியிலிருந்தபோது பனமடங்கி காவல் நிலைய குற்ற எண்.252/2020 வழக்கில் இறந்து போன கிருஷ்ணன், வயது 65 என்பவரது உடல் உறுப்புகளான இரைப்பை, சிறுகுடல், கல்லீரல் மற்றும் சிறுநீரகம், மூளை, இரத்தம் மற்றும் பாதுகாப்பு திரவம் ஆகியன பேராசிரியர் சட்டம் சார்ந்த மருத்துவம் வேலூர் அரசு கல்லூரி மருத்துவமனை அவர்களின் கடிதத்துடன் சரியான முத்திரையுடனும் இவ்வாய்வகத்தில் பெறப்பட்டன. மேற்படி உள்ளுறுப்புகளை பகுப்பாய்வு செய்ததில் ஆல்கஹால் அல்லது வேறு எந்த நச்சுப் பொருளும் காணப்படவில்லை என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது. இதனை ஆய்வறிக்கையாக தயாரித்து இவ்வாய்வக

நஞ்சியல் எண்.569/2020 நாள்.13.07.2020 என அறிக்கையாக வழங்கியுள்ளேன். அந்த ஆய்வக அறிக்கை அ.த.சா.ஆ.26 ஆகும்.

இந்த வழக்கு தொடர்புடைய இரத்தம் தோய்ந்த கட்டுத் துணி ஆனது பேராசிரியர் சட்டம் சார்ந்த மருத்துவம் வேலூர் அரசு கல்லூரி மருத்துவமனை அவர்களின் கடிதத்துடன் சரியான முத்திரையுடன் பெறப்பட்டு மேல் ஆய்வுக்காக தடய அறிவியல் துறை சென்னைக்கு திரு.சேவியர் நித்தியாநந்தம் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டது. அந்த ஆய்வறிக்கையில் VLR/BIOL/165/2020 நாள் 14.07.2020 மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. அந்த அறிக்கை அ.த.சா.ஆ.27 ஆகும். இந்த வழக்கு மேல் அனுப்பப்பட்ட மாதிரி இரத்த வகை O பிரிவு என கண்டறியப்பட்டது. இவ்வாய்வறிக்கை திருமதி.விஜயலட்சுமி அறிவியல் அலுவலர் தடய அறிவியல் ஆய்வகம் சென்னை அவர்களால் வழங்கப்பட்டது. இவ்வாய்வறிக்கை எண்.SER/VLR/84/2020 நாள் 03.03.2021. இந்த குருதி வடிநீரியியல் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.28 ஆகும்.

இதே வழக்கு தொடர்புடைய சான்று பொருட்களை, நீதித்துறை நடுவர் காட்பாடி ஆய்விற்காக அனுப்பி வைத்தார். இவ்வழக்கு பொருட்களை திரு.சேவியர் நித்தியாநந்தம் இளநிலை அறிவியல் அலுவலர் பகுப்பாய்வு செய்து இவ்வழக்கு பொருட்கள் 1 முதல் 20 ல் பொருள் 1, 3 முதல் 6 மற்றும் 10-முதல் 20 ஆகியவற்றில் இரத்தம் காணப்பட்டது எனவும் பொருள் 2,7,8 மற்றும் 9 ஆகியவற்றில் காணப்படவில்லை என்றும் அறிக்கை வழங்கியுள்ளார். அந்த உயிரியல் அறிக்கை எண்.VLR/BIOL/181/2020 நாள் 23.09.2020 இவ்வழக்கு மாதிரிகளை குருதி வடிநீரியியல் ஆய்விற்காக தடய அறிவியல் ஆய்வகம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த உயிரியல் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.29 ஆகும். மேல் அனுப்பி வைக்கப்பட்ட மாதிரிகள் திருமதி.விஜயலட்சுமி அறிவியல் அலுவலர் மூலம் ஆய்வு செய்யப்பட்டு 1, 3, 4,

5, 6, 10 முதல் 20 வரையான பொருட்கள் மனித இரத்த வகையை சார்ந்தது எனவும், பொருள் 4, 5, 6, 10, 11, 12 ஆகியவற்றில் O இரத்தப் பிரிவு காணப்பட்டது எனவும், அறிக்கை வழங்கியுள்ளார். இவ்வறிக்கை எண்.SER/VLR/92/2020 நாள் 03.03.2021. ஆயுங்கள் மற்றும் இறந்தவர், காயம் பட்டவர் துணியிலிருந்த குருதி குறித்த குருதி வடிநீர் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.30 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை- இல்லை

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 12.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.12 18:23:51 +0600

Additional District Judge(FTC),
Vellore